(Under Section.173 BNSS)

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(குற்ற விசாரணை முறை சட்டம் 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109482

1. District : Coimbatore
மாவட்டம்
PS: V&AC
காவல்நிலையம்
Year: 2025
ஆண்டு
FIR No.: 08/2025/AC/CB
மு.த.அ. எண்
Date: 22.4.2025 at 1530hrs
நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of
Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Corruption Act 1988 as
Sections பிரிவுகள்: Sec. 7
(iii) Act சட்டம்: amended by 2018
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 21.4.2025
நாள் முதல்
Date to : 22.4.2025
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from : 1550hrs
நேரம் முதல்
Time to : 0230 hrs
நேரம் வரை
(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.4.2025
Time
நேரம் 1515 hrs
(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 22.4.2025
Time
நேரம் 1515 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: about 48 Kms, South East
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : o/o. Vadambachery Sri Ramalinga Choodambiga Primary Handloom Weaver's Co-op P&S Society Ltd No.K.905, Vadambachery.
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr.S.Shajakhan
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name :
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 37/2025
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Special Deputy Inspection Cell Officer/ Deputy Tahsildar
தொழில்
(g) Address : Sulur Taluk office, Coimbatore Dist.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tr.S.Soundappan, Manager, Vadambachery Sri Ramalinga Choodambiga Primary Handloom Weaver's Co op P&S society Ltd No.K.905 Vadambachery.

8. Reasons for delay in reporting by the complainant/ Informant : —
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

(Under Section 173 BNSS)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

22/4/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

22/4/25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
22.4.2025 at 1700 hrs

Name: பெயர் C. LATHA
Rank: நிலை Inspector of Police, VEAC, Coimbatore No. எண் ..........

**<u>பணிந்து சமர்பிக்கப்படுகிறது:</u>**

**<u>In continuation of FIR in Coimbatore V&AC Cr.No.08/2025/AC/CB u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018.</u>**

இன்று 22.04.2025 ஆம் தேதி 15.15 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் C.லதா ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது S.ஷாஜஹான், சிறப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர் / வட்ட வழங்கல் அலுவலர் / துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், சூலூர், கோவை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரின் விவரம் பின்வருமாறு:- S.ஷாஜஹான், சிறப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர் / வட்ட வழங்கல் அலுவலர் / துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், சூலூர், கோவை. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோவை. ந.க.எண்.20/2025/A2, நாள்: 22.04.2025, அம்மையீர், பொருள்: திடீர் தணிக்கை – கோயம்புத்தூர் மாவட்டம் – வதம்பச்சேரி ஸ்ரீ ராமலிங்க சூடாம்பிகா பருத்தி மற்றும் பட்டு தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிட்., எண்.கே.905 – திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது – மேல் நடவடிக்கைக்காக புகார் அளித்தல் – சம்மந்தமாக. கோவை மாவட்டம் சூலூர் வட்டத்தில் உள்ள வதம்பச்சேரி ஸ்ரீ ராமலிங்க சூடாம்பிகா பருத்தி மற்றும் பட்டு தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிட்., **எண்.கே.905** என்ற அலுவலகத்தில் பணிபுரியும் மேலாளர் திரு.சவுண்டப்பன் என்பவர் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்களுக்கு தமிழ்நாடு அரசால் தள்ளுபடி மானியமாக வழங்கப்பட்ட தொகையில் 3 சதவீதத்தொகையை லஞ்சமாக அனைத்து சங்கங்களில் இருந்தும் வசூல் செய்து அலுவலகத்தில் வைத்திருப்பதாக கிடைக்கபெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் கோவை மாவட்டம் சூலூர் வட்டத்தில் உள்ள வதம்பச்சேரி ஸ்ரீ ராமலிங்க சூடாம்பிகா பருத்தி மற்றும் பட்டு தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்க அலுவலகத்தை **21.04.2025** ஆம் தேதி **15.50** மணி முதல் **22.04.2025** ஆம் தேதி **02.30** மணிவரை கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.C.லதா மற்றும் காவல் குழுவினர்களுடன் திடீர் தணிக்கை செய்யப்பட்டது. மேற்படி தணிக்கையின் போது வதம்பச்சேரி ஸ்ரீ ராமலிங்க சூடாம்பிகா பருத்தி மற்றும் பட்டு தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி

மற்றும் விற்பனைச் சங்கத்தின் மேலாளர் திரு.சவுண்டப்பன் அமர்திருந்த இருக்கையை ஒட்டி வைக்கப்பட்டிருந்த சிறிய இரும்பு பணபெட்டியை திறந்து சோதனை செய்த போது அதில் இருந்து மதுரை சரகம் என்று எழுதப்பட்டிருந்த புளுகலர் டேப்பால் ஒட்டப்பட்ட பச்சை நிற கவர் ஒன்றும், தினசரி நாளிதழில் பண்டலாக சுற்றி பிரவுன்கலர் டேப்பால் ஒட்டி வைக்கப்பட்டிருந்த ஒரு பார்சலும் இருந்தது. மேற்படி மதுரை சரகம் என்று எழுதப்பட்டிருந்த பார்சலை திறந்து பார்த்த போது அதில் 500 ரூபாய் கத்தைகளாக 100 எண்ணிக்கையிலான நான்கு கத்தையும், தனியாக பன்னிரெண்டு 500 ரூபாய் தாள்களும் மொத்தம் பணம் ரூ.2,06,000/– (500x412) இருந்தது. மேலும் அந்த பார்சலில் ஒரு வெள்ளை பேப்பரில் MADURAI CIRCLE என்ற தலைப்பில் 1 முதல் 21 சங்கங்களின் பெயர்கள் டைப் செய்யப்பட்டு அந்த சங்கங்களின் பெயர்களுக்கு எதிராக தொகை குறிப்பிடப்பட்டு அதில் 3 சதவீதம் என்று டைப் செய்யப்பட்டு ஒவ்வொரு சங்கங்களுக்கு நேராக அதற்குரிய தொகையை எழுதி மொத்தம் பணம் ரூ.2,06,000/– என்று டைப் செய்யப்பட்டிருந்தது. மற்றொரு தினசரி நாளிதழில் பண்டலாக சுற்றி வைக்கப்பட்டிருந்த பார்சலை பார்த்த போது அதில் 500 ரூபாய் கத்தைகளாக 100 எண்ணிக்கையிலான 5 கத்தைகள் (500x500) இருந்தது. அவற்றை எண்ணி பார்க்க அதில் பணம் ரூ.2,50,000/– இருந்தது. மேலும் வேறு ஏதேனும் பணம் உள்ளதா என்று மேலாளரிடம் விசாரித்த போது அவர் மேற்குபுறத்தில் உள்ள பக்கத்து அறையான பாவு நூல் வைக்கப்பட்டிருக்கும் அறையில் உள்ள பெரிய இரும்பு பெட்டகத்தில் பணம் வைத்திருப்பதாக கூறியதன் பேரில், அந்த அறையில் இருந்த மேற்படி பெட்டகத்தை அவரிடமிருந்த சாவியை கொண்டு திறந்து சோதனை செய்த போது இரண்டு மஞ்சப்பையில் 500 ரூபாய் நோட்டு கத்தைகள் இருந்தது. அதில் ஒரு மஞ்சப்பையில் பாலித்தின் கவரில் 500 ரூபாய் கத்தைகளாக இருந்ததை எடுத்து எண்ணிப்பார்த்த போது அதில் மொத்த பணம் ரூ.6,76,000/– (500x1352) இருந்தது, அந்த பாலித்தின் கவருக்குள் Kanchipuram என்று தலைப்பில் டைப்செய்யப்பட்டு 1 முதல் 32 வரை கூட்டுறவு சங்ககளின் பெயர்களுக்கு எதிராக தொகை குறிப்பிடப்பட்டு அதில் 3 சதவீதம் என்று டைப் செய்யப்பட்டு ஒவ்வொரு சங்கங்களுக்கு நேராக அதற்குரிய தொகையை எழுதி மொத்தம் பணம் ரூ.6,82,388.46/– என்று டைப் செய்யப்பட்டிருந்தது. மேலும் மற்றொரு மஞ்சப்பையில் தினசரி நாளிதழ் மூலம் பண்டல் செய்யப்பட்டு அதன்மேல் திருச்சி 4.20 என்று பேனாவால் எழுதப்பட்டிருந்தது. மேற்படி பண்டலை பிரித்து பார்க்க அதில் 500 ரூபாய் நோட்டு கத்தைகளாக இருந்ததை எடுத்து எண்ணிப்பார்த்த போது அதில் மொத்த

பணம் ரூ.4,20,000/– (500x840) இருந்தது. மேலும் அந்த பெட்டகத்ததில் இருந்த மஞ்சள் பாலித்தின் கவரை எடுத்து பார்த்த போது அதில் தினேஷ் 387950 என்று பேனாவால் எழுதப்பட்டிருந்தது. அந்த பாலித்தின் கவரினுள் 500 x 74 ரூபாய் நோட்டுகளும், 100 x 9 ரூபாய் நோட்டுகளும், 50 x 1 ரூபாய் நோட்டும், ஆக மொத்தம் பணம் ரூ.37,950/– இருந்தது. மேலும் அந்த பெட்டகத்திற்குள் வேறு ஏதேனும் பணம் உள்ளதா என்று மேலாளரிடம் விசாரிக்க அவர் ஒவ்வொரு முறையும் சாமிகும்பிட்டுவிட்டு கணக்கு தொடங்கும் போது ஒரு குறிப்பிட்ட தொகையை எடுத்து சங்க கவரில் போட்டு வைப்பதாகவும் தெரிவித்தார். மேற்படி ஒவ்வொரு கவரிலும் ரூ.909/– வீதம் மொத்தம் 9 கவர்கள் இருந்ததை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அந்த அறைக்கு எதிரே இருந்த அறையை சோதனை செய்த போது அதில் நெசவு முடித்து வரப்பட்ட சேலைகள் வைக்கப்பட்டிருந்தது. அந்த அறைகளுக்கு மேற்புறம் உள்ள மேலாண்மை இயக்குனர் அறையை சோதனை செய்த போது அங்கு எந்த பணமும் கைப்பற்றப்படவில்லை. மேற்படி சோதனையின் போது மேலாளர் இருக்கைக்கு அருகில் இருந்த சிறிய பணப்பெட்டி மற்றும் பாவு நூல் வைக்கப்பட்டிருக்கும் அறையில் உள்ள பெரிய இரும்பு பெட்டகத்தில் காணப்பட்ட பணத்தை பற்றி மேலாளர் திரு.சவுண்டப்பனிடம் விசாரிக்க, அவர் தன்னுடைய உயர் அதிகாரியான உதவி இயக்குனர் திரு.வெற்றிவேல் மற்றும் மேலாண்மை இயக்குனர் / செயலாட்சியர் திரு.பொம்மையாசாமி ஆகியோர்களின் உத்தரவின் பேரில் தமிழ்நாட்டில் உள்ள 18 சரகங்களில் உள்ள கூட்டுறவு நெசவாளர் உற்பத்தி மற்றும் விற்பனை சங்கங்களுக்கு தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட மானிய தொகையிலிருந்து 3 சதவீத தொகைகளை வசூல் செய்து அந்த தொகைகளை கோவை மாவட்டம் கணபதியிலுள்ள பாலாஜி விசைத்தறி சங்கத்தின் மேலாளர் திரு.பால்ராஜ் என்பவரிடம் ஒப்படைத்து விடும்படி கூறியதன் பேரில், கோவை சரகம் சோமனூர் பகுதியில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் இருந்து மானிய தொகையில் 3 சதவீத தொகையை திரு.தினேஷ் (7373766765) என்பவர் மூலம் வசூல் செய்த தொகை ரூ.3,87,950/– என்றும், திருச்சி சரகத்தில் இருந்து திரு.தண்டபானி (9629913616) என்பவர் மூலம் வசூல் செய்த தொகை ரூ.4,20,000/– என்றும், காஞ்சிபுரம் சரகத்தில் இருந்து திரு.சிவபிரகாஷ் (9790174843) என்பவர் மூலம் வசூல் செய்த தொகை ரூ.6,82,388/– என்றும், மதுரை சரகத்தில் இருந்து திரு.ராம்குமார் (8072521067) என்பவர் மூலம் வசூல் செய்த தொகை ரூ.2,06,000/– என்றும் தெரிவித்தார். மேற்படி தொகைகளில் மதுரையை தவிர மற்ற நபர்கள் அனைவரும் கடந்த 19.04.2025 ஆம் தேதி தன்னுடைய சங்க அலுவலகம் வந்து தான் சொன்னதன் பேரில் தற்போது கணக்காளராக உள்ள திரு.கணேஷ் என்பவர் வசம்

ஒப்படைத்தாகவும், பின்னர் அவரிடமிருந்து தான் பெற்று கொண்டதாகவும் தெரிவித்தார். மதுரை சரகத்தை சேர்ந்த பணத்தை நேற்று 20.04.2025 ஆம் தேதி தான் பரமக்குடிக்கு நேரில் சென்று மதுரை சங்க மேலாளர் ராம்குமார் என்பவரிடமிருந்து பெற்றுகொண்டு வந்ததாகவும் தெரிவித்தார். இதனிடையே தினேஷ் சோமனூர் (7373766765) என்பவருக்கு மேலாளர் சவுண்டப்பன் அவர்களின் செல்போனில் இருந்து காவல் ஆய்வாளர் தொடர்பு கொண்டு திறந்த ஒலிபெருக்கி மூலம் சாட்சிகளின் முன்னிலையில் பணம் ரூ.3,87,950/– கொடுத்தது சம்மந்தமாக விசாரித்த போது அவர் தான் ஏற்கனவே கோவை மாவட்டத்திற்கு உட்பட்ட சங்கங்களில் பணம் வசூல் செய்யப்பட்ட விவரங்களை வாட்ஸ்அப்பில் அனுப்பியுள்ளதாகவும், வேண்டும் என்றால் திரும்ப அனுப்பி வைப்பதாக சொல்லி அந்த விவரங்களை சவுண்டப்பன் செல்போன் எண்ணிற்கு அனுப்பிவைத்தார். மேற்படி அவர் அனுப்பி வைத்த பதிவுகளை வாட்ஸ்அப் ல் திறந்து பார்த்து Mobile மூலம் போட்டோ எடுத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது. பின்னர் சிறிது நேரத்தில் தினேஷ் என்பவர் அவர் அனுப்பிய பதிவுகளை அழித்து விட்டார். அதனையும் Screen Shot எடுத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது. மேற்படி கோவை சரகத்தை சேர்ந்த தினேஷ் என்பவர் கொடுத்த தொகையில் இருந்து ரூ.1,00,000/–யும், காஞ்சிபுரம் சரகத்தை சேர்ந்த திரு.சிவபிரகாஷ் என்பவர் கொடுத்த தொகையில் இருந்து ரூ.6,388/–மும் தான் சொந்த செலவிற்கு பயன்படுத்திவிட்டதாகவும் தெரிவித்தார். மேற்படி சோதனையின் போது கூட்டுறவு சங்கங்களில் இருந்து வசூல் செய்து வைக்கப்பட்ட மொத்த தொகை ரூ.15,89,950/– ஐ லஞ்சப்பணம் என்பதால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் பணத்துடன் இருந்த 1) MADURAI CIRCLE என்ற தலைப்பில் 1 முதல் 21 சங்கங்களின் பெயர்கள் டைப் செய்யப்பட்டு அந்த சங்கங்களின் பெயர்களுக்கு எதிராக தொகை குறிப்பிடப்பட்டு அதில் 3 சதவீதம் என்று டைப் செய்யப்பட்டு ஒவ்வொரு சங்கங்களுக்கு நேராக அதற்குரிய தொகையை எழுதி மொத்தம் பணம் ரூ.2,06,000/– என்று டைப் செய்யப்பட்டிருந்த வெள்ளை பேப்பர், 2) பணம் ரூ.2,06,000/– வைக்கப்பட்ட மதுரை சரகம் என்று எழுதப்பட்டு புளுகலர் டேப்பால் ஒட்டப்பட்ட பச்சை நிற கவர் ஒன்றும், 3) Kanchipuram என்று தலைப்பில் டைப்செய்யப்பட்டு 1 முதல் 32 வரை கூட்டுறவு சங்ககளின் பெயர்களுக்கு எதிராக தொகை குறிப்பிடப்பட்டு அதில் 3 சதவீதம் என்று டைப் செய்யப்பட்டு ஒவ்வொரு சங்கங்களுக்கு நேராக அதற்குரிய தொகையை எழுதி மொத்தம் பணம் ரூ.6,82,388.46/– என்று டைப் செய்யப்பட்டிருந்த ஒரு வெள்ளை பேப்பர், 3) பணம் ரூ.37,950/– ஐ மஞ்சள் பாலித்தின் கவரில் தினேஷ் 387950 என்று பேனாவால் எழுதப்பட்டிருந்த கவர், 4) பணம் ரூ4,20,000/– ஐ தினசரி

நாளிதழ் மூலம் பண்டல் செய்யப்பட்டு அதன்மேல் திருச்சி 4.20 என்று பேனாவால் எழுதப்பட்டு பிரவுன் டேப்பால் ஒட்டபட்டிருந்த தினசரி நாளிதழ், 5) பணம் ரூ.2,50,000/– ஐ தினசரி நாளிதழில் சுற்றி பிரவுன்கலர் டேப்பால் ஒட்டி வைக்கப்பட்டிருந்த . தினசரி நாளிதழ் ஆகியவற்றை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த அலுவலகத்தில் பணியில் இருந்த நபர்களிடம் வேறு ஏதேனும் பணம் உள்ளதா என்று விசாரிக்க, திரு.சிவராஜ் என்பவரிடம் பணம் ரூ.120/– மும், திரு.மாசிலாமணியிடம் பணம் ரூ.1210/– ம், திருமதி.மதுபிரியாவிடம் பணம் ரூ.500/–, திருமதி.பிருந்தாவிடம் பணம் ரூ.2,520/–ம், திரு.கணேசனிடம் பணம் ரூ.750/–ம் இருந்தது. மேற்படி பணமானது அவர்களது சொந்த பணம் என்று சொன்னதால் மேற்படி பணத்தை அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதே போல் மேலாளர் அவர்களிடம் வேறு பணம் பற்றி விசாரிக்க தனது பேண்ட் பாக்கட்டில் இருந்து பணம் ரூ.16,270/– எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணமானது அவரது சொந்த பணம் என்று சொன்னதால் மேற்படி பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி கூட்டுறவு சங்கங்களின் உதவி இயக்குனர் திரு.வெற்றிவேல் என்பவருக்கும், மேலாண்மை இயக்குனர் / செயலாட்சியர் திரு.பொம்மையாசாமி என்பவருக்கும் தகவல் கொடுத்து வரசொன்னதன் பேரில் மேலாண்மை இயக்குனர் / செயலாட்சியர் திரு.பொம்மையாசாமி என்பவர் அலுவலகத்திற்கு 21.00 மணிக்கு வந்தவரிடம் மேற்படி அலுவலகத்தில் திடீர் சோதனை நடைபெற்று கொண்டிருந்த விவரங்களை கூறி தொடர்ந்து நடைபெறும் சோதனை சம்மந்தமான நடவடிக்கையில் கலந்து கொள்ள கேட்டுக்கொண்டதன் பேரில் அவரும் சம்மதம் தெரிவத்து கலந்து கொண்டார். பின்னர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் உற்பத்தி மற்றும் விற்பனை சம்மந்தமான பதிவேடுகள், பணப்பதிவேடு மற்றும் இதர பதிவேடுகளை பற்றி மேலாளரிடம் கேட்க, அவர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகளை எடுத்து ஆஜர் செய்தார். அதில் 1) மொத்த விற்பனை பில் புத்தகம் (Whole Sale Bill Book)- (அசல்), 2) விற்பனை தொகுப்பு (Sales Chitta) (அசல்), 3) கொள்முதல் கோப்பு-2024-2025 (Purchase file) (அசல்), 4) நாள் வழிப்பதிவேடு (Cash day book Register)- (அசல்), 5) முடிவடைந்த சரக்கு இருப்புப்பதிவேடு (FGS) (Finished Goods Stock Register-I) (அசல்), 6) Finished Goods Stock Register-II- (அசல்), 7) பொது பேரேடு 2024-2025 (General Ledger-Rebate subsidy)- (அசல்), 8) சங்க பணியாளர்களின் 2025 ஏப்ரல் மாதத்திற்கு உண்டான வருகை பதிவேடு (நகல்) மற்றும் மானியம் சம்மந்தப்பட்ட சுற்றறிக்கைகளின் நகல்கள் ஆகிய அனைத்தும் விசாரணைக்கு தேவைப்படுவதால்

கைப்பற்றப்பட்டது. மேற்படி சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.15,89,950/–க்கும் இச்சங்க அலுவலக வரவு செலவு கணக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று மேற்படி பதிவேடுகளை பார்வையிட்டு மேலாண்மை இயக்குனர் / செயலாட்சியர் திரு.பொம்மையாசாமி அவர்கள் உறுதி படுத்தினார். மேலும் மேலாளர் திரு.சவுண்டப்பன் உபயோகபடுத்திவரும் சாம்சங் செல்போனை எடுத்து ஆய்வு செய்த போது அதில் அவர் வாட்ஸ்அப் செயலியில் மேற்படி வசூல் செய்யப்பட்ட பணம் சம்மந்தமான விவரங்களை கோவை கூட்டுறவு சங்கங்களின் உதவி இயக்குனர் (கைத்தறி) திரு.வெற்றிவேல் என்பவருக்கும், மேலாண்மை இயக்குனர் திரு.பொம்மையாசாமி என்பவருக்கும் மற்றும் பாலாஜி பவர்லூம் மேலாளர் திரு.பால்ராஜ் என்பவருக்கும் வாட்ஸ்அப் செயலியில் குறுஞ்செய்தியாக அனுப்பிய விவரங்கள் காணப்பட்டது. மேலும் இவரது செல்போன் எண்ணில் இருந்து கண்ணன் பரமக்குடி (9095868375), யூனியன் சிவப்பிரகாஷம், காஞ்சிபுரம் (9790174843), யூனியன் ராம்குமார் மதுரை (8072521067), தண்டபாணி திருச்சி – மணல்மேடு சங்க மேலாளர் (9629913616), SRC கணேஷ் (9597896769) ஆகிய நபர்களுக்கு பேசிய அழைப்புகளின் விவரங்கள் மற்றும் மேற்படி பணம் வசூல் சம்மந்தமான வாட்ஸ்அப் குறுஞ்செய்திகளை செல்போனில் இருந்து Screen Shot பதிவுகளாக பிரிண்ட் எடுக்கப்பட்டும், இவர்களுக்கு இடையே நடைபெற்ற வாட்ஸ்அப் அழைப்புகளின் விவரங்களை பதிவேற்றம் செய்து குறுந்தகட்டில் சேகரம் செய்யப்பட்டது. மேற்படி பிரிண்ட் எடுக்கப்பட்ட ஆவணம் 1 முதல் 114 பக்கங்கள் கொண்டதாகும். அதனை விசாரணைக்கு வேண்டி கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து சங்க அலுவலகத்தில் இருந்த திரு.கணேசன் என்பவரது செல்போனையும் ஆய்வு செய்தும் அவரது வாட்ஸ் அப்பில் இருந்த விவரங்களை Screen Shot எடுத்து பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டது. மேற்படி அனைத்தையும் விசாரணைக்கு தேவைபடுவதால் கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.சவுண்டப்பன் என்பவரின் சாம்சங் (Samsung Galaxy A14 5G, SM-A146B/DS) செல்போன் ஒன்று விசாரணைக்கு தேவைபடுவதால் கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக திடீர் தணிக்கை நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டது. திடீர் தணிக்கையின் சங்கத்தின் மேலாளர் திரு.சவுண்டப்பன் என்பவர் அளித்த வாக்குமூலத்தை பதிவு செய்தேன். திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.15,89,950/–, வாக்குமூலம், Samsung Galaxy A14 5G, SM-A146B/DS-செல்போன், திடீர் தணிக்கை நடவடிக்கை மற்றும் இதர ஆவணங்களின் அசல் மற்றும் நகல்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். சம்மந்தப்பட்ட நபர் மீது நடவடிக்கை எடுக்குமாறு

கேட்டுக்கொள்கிறேன். (Sdxxxxx) 22/04/2025 (S.ஷாஜஹான்) சிறப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர் / வட்ட வழங்கல் அலுவலர் / துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், சூலூர், கோவை, Sir, Received the complaint along with Proceedings, Statement, Cell Phone, DVD-1, Documents and Cash of Rs.15,89,950/- on 22.04.2025 at 15.15 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.08/2025/AC/CB u/s 7 of PC Act, 1988 as amended by PC (Amendment) Act, 2018 on 22.04.2025 at 15.30 hrs. (Sdxxxxx) 22.04.2025 (C.LATHA), Inspector of Police, Vigilance and Anti Corruption, Coimbatore. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு, திடீர் சோதனை நடவடிக்கைகள், வாக்குமூலம், குறுந்தகடு–1 மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.15,89,950/- ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

22/4/2025

(C.லதா)
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு, கோவை.